செ. வெ. எண்: 508 நாள்: 4.08.2011.

# அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் லிமிடெட்

## பத்திரிக்கைச் செய்தி

அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் இணைய உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் (LCO) மற்றும் எம்.எஸ்.ஓ. (MSO)–க்களுக்கு 30.07.2011 அன்று ஆன்லைன் மூலமாக பதிவு செய்ய அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில், இதுவரை எல்.சி.ஓ.–க்கள் மற்றும் எம்.எஸ்.ஓ.–க்கள் 20000 பேர் பதிவு செய்து சிக்னல் பெற சம்மதம் தெரிவித்துள்ளனர். மேலும் ஆன்லைன் மூலம் பதிவு செய்யும் காலக்கெடுவை இறுதிநாளான 5.8.2011–ற்கு பிறகு இன்னும் சிலநாட்கள் நீட்டித்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். எல்.சி.ஓ.–க்கள் வேண்டுகோளை ஏற்று ஆன்லைன் மூலம் பதிவு செய்யும் கடைசி தேதி 9.8.2011 வரை நீட்டிக்கப்படுகிறது.

மேலும் தலைமுனைகளை நிறுவவும் பராமரிக்கவும் 15 கன்சல்டண்டுகள் வாக்–இன்–இன்டெர்வியூ மூலமாக நிரப்பப்பட உள்ளனர். வாக்–இன்–இன்டர்வியூ நாள் 8.8.2011 ஆகும். அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் சேர விருப்பம் உள்ள அனைவரும் வரும் 9.8.2011–ற்குள் ஆன்லைன் மூலம் பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை முனைவர் மு.ஜெயராமன், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

For ARASU CABLE TV CORPORATION LTD.,

4.8.11

Managing Director

வெளியீடு, இயக்குநர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9